**செய்தி வெளியீடு எண்:** **நாள் :20.03.2015**

# <u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு அரசு**

கைத்தறி மற்றும் துணிநூல் துறை

தமிழ்நாடு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை – 2015

தமிழ்நாடு அரசு, கைத்தறித் துறையில் 2.5 இலட்சம் கைத்தறி நெசவாளர்களை கொண்டு மிக உன்னதமான மாநிலமாகத் திகழ்கிறது. இந்திய அளவில், நேர்த்தியான, நவீன யுகத்திற்கு ஏற்றவாறும், பராம்பரியம் மிக்க, அரிய வகையான சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் 1300 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு, ஜவுளித் தொழிலில் முதன்மை மாநிலமாக விளங்குவதோடு, கிராம மற்றும் நகர்ப்புற மக்களுக்கு, அதிக வேலைவாய்ப்புகளை வழங்கி மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு அளிக்கிறது. இம்மாநிலம், ஓர் ஆண்டிற்கு ரூ.800 கோடி மதிப்பிற்கு கைத்தறி ரகங்களை உற்பத்தி செய்து ரூ.900 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து வருகிறது.

கைத்தறி ரகங்களை ஒருங்கிணைத்து, ஒரே கூரையின் கீழ் விற்பனை செய்யும் நோக்கோடும், இவற்றிற்கான சந்தையினை விரிவுபடுத்தும் நோக்கோடும், தமிழக அரசு நாட்டின் முக்கிய 5 பெருநகரங்களான புதுடில்லி, கல்கத்தா, மும்பை, ஐதாராபாத் மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் கைத்தறி கண்காட்சிகள் நடத்தி வருகிறது.

இக்கண்காட்சியில் காஞ்சிபுரம், ஆரணி, சேலம் மற்றும் திருபுவனம் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டு புடவைகள் மற்றும் கோயம்புத்தூர் மென் பட்டு புடவைகள், திருப்பூர், பரமக்குடி, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி புடவைகள், ஈரோடு, பவானி, சென்னிமலை ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பெட்சீட் ரகங்கள், துண்டு ரகங்கள் ஜமக்காளம் மற்றும் வீட்டு உபயோக துணி ரகங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பெங்களூரில் 20.03.2015 முதல் 29.03.2015 முடிய நடைபெறவுள்ள கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையில், சில குறிப்பிட்ட ரகங்களுக்கு சிறப்பு விற்பனை சலுகையாக 50% வழங்கப்படும்.

**பெங்களூரு, ஜெய நகர், அசோக் பில்லர் அருகில் உள்ள ஹேமச்சந்திரா கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிற, இக்கைத்தறி கண்காட்சியை கர்நாடக அரசின் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர், டாக்டர் ஷாலினி ரஜ்னீஷ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.**

இக்கண்காட்சியில் தமிழக அரசின் கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் இணை இயக்குநர் திரு. சொ.வை. கந்தசாமி அவர்களும் துறையின் இதர அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சி விற்பனையில் அனைத்து வங்கிகளின் கடன் அட்டைகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**